**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 293/2019 |
| Name | : Anandaraj |
| P.W. | : 9 |
| Father Name | : Kumarasamy |
| Village | : Kozhumam |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 28/2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of . 28.03.2022

நான் தற்போது கொழுமத்தில் குடியிருந்து பி.ஹெச்.டி படித்து வருகிறேன். 25.10.2010 ம் வருடம் நான் பன்னிரெண்டாம் வகுப்பு படித்த போது காலை 09.05 இருக்கும் பள்ளிக்கூடம் செல்வதற்காக கொழுமம் பேருந்து நிறுத்தத்திற்கு வந்தேன். கொழுமம் பேருந்தது நிறுத்தத்தில் அப்போது வடக்கில் இருந்து தெற்கு நோக்கி ஒரு டிராக்டர் வந்தது. அந்த இடத்தில் தண்ணீர் டேங்க் இருந்தது அந்த இடத்தில் குப்பை சாக்கு போன்று ஒன்று இருந்தது. அதன் மீது டிராக்டர் ஏறிய போது டமார் என்று சத்தம் கேட்டது பின்னர் கல் , கண்ணாடி எல்லாம் என் மேல் பட்டு கிழித்தது எனது நண்பர்கள் சரவணன், மாரிமுத்து, சுரேஷ் ஆகியோர் மீதும் பட்டது . ஆம்புலன்ஸ் வந்த எங்களை உடுமலை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். டிராக்டரை யார் ஓட்டினார்கள் என்ற

விவரம் எனக்கு தெரியாது. யார் வைத்தது என்ன பொருள் என்று எனக்கு தெரியாது. என்னை போலீசார் விசாரித்தார்கள்.

போதிய வாய்ப்பு கொடுத்தும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 293/2019 |
| Name | : Thangavel |
| P.W. | : 10 |
| Father Name | : Rasugounder |
| Village | : Kozhumam |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 45/2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of . 28.03.2022

நான் தற்போது கொழுமத்தில் குடியிருந்து டிரைவராக வேலை செய்கிறேன் 25.10.2010 அன்று காலை 09.00 மணி முதல் 09.30 மணி இருக்கும் நான் வேன் டிரைவர் என்பதால் அங்கு ஸ்டாண்ட் உள்ளது நான் சிட்டி பேக்கரியில் டீ சாட்பபிட்டுக் கொண்டிருந்த போது நான் சத்தம்கேட்டு ஓடி வந்து பார்த்த போது கீழே கிடந்த சாக்கின் மீது டிராக்டர் ஏறியது என்று சொன்னார்கள். அங்கு அடிப்பட்டவர்களை நாங்கள் தான் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். அன்று மதியம் 02.30 மணி முதல் மதியம் 03.30 மணிக்குள் மேப் போட்டார்கள் நான் கையொப்பம் செய்தேன். என்னுடன் சேர்ந்து கரிகாலன் என்பவரும் சேர்ந்து போட்டார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான். அது அ.சா.ஆ. 2ஆகும். பார்வை

மகஜரில் உள்ள கையொப்பம் எதற்காக வாங்கப்பட்டது என்றால் போலீசார் மேப் போட்டதற்காக வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான். அ து அ.சா.ஆ.3 ஆகும். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

சாட்சி அரசு தரப்பிற்கு பகுதி ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டது.

அரசு தரப்பில் கு.வி

என் முன்னிலையில் 25.10.2010 ம் தேதி 6 மணிக்கு சம்பவ இடமான சக்தி பேக்கரி முன்பு வெடி விபத்து சமயத்தில் எறிந்து போன சாக்கின் ஒரு பகுதி , வெடிமருந்து துகள்களுடன் கூடிய மண் மற்றும் மாதிரிக்கு எடுக்கப்பட்ட மண் ஆகியவை என் முன்னிலையில் போலீசார் கைப்பற்றினார்கள் என்றால் சரிதான். அப்போது என்னுடன் கரிகாலனும் இருந்தார்.

போதிய வாய்ப்பு கொடுத்தும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.